ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2496/39 - 2026 ජූලි මස 10 වැනි සිකුරාදා - 2026.07.10

2496/39 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

பணிப்புரை இல. 100

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்**
**(திருத்தியமைக்கப்பட்டது)**

10(1)(அ) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 10(1)(அ) இன் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் செயற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களின் இறக்குமதியாளர், உற்பத்தியாளர், பொதியிடுபவர், விநியோகஸ்தர் அல்லது வியாபாரி எவரும் குறித்த பொருட்களின் பொதி அல்லது சுட்டுத்துண்டில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அச்சடிக்கப்பட்டிருந்தாலன்றி அத்தகைய பொருட்களை இறக்குமதி செய்யவோ, உற்பத்தி செய்யவோ, பொதியிடவோ, விநியோகிக்கவோ, விற்பனை செய்யவேர, விற்பனைக்காக காட்சிப்படுத்தவோ, விற்பனைக்காக வழங்கவோ, மொத்தமாகவோ அல்லது சில்லறையாகவோ விற்பனை செய்யவோ முடியாதென பணிப்புரை விடுக்கின்றது.

**அச்சிடப்பட வேண்டிய தகவல்கள்:**

- பிரதான முகப்பில் (Main Panel) சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் அல்லது பிரதான முகப்பில் அந்த மூன்று மொழிகளில் ஏதேனும் இரண்டு மொழிகளிலும் வேறு ஏதேனும் முகப்பில் மற்றுமொரு மொழியிலும் தடித்த எழுத்தில் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உற்பத்திப் பொருளின் பொதுப்பெயர்.

- மொத்த கொழுப்புப் பொருளின் (TFM) நிறை சதவீதமானது. பொருள் பொதி செய்யப்படும்போது, அதன் சுட்டுத் துண்டில் 2 மில்லிமீற்றருக்கு (2mm) குறையாத எழுத்துரு அளவில், தடித்த எழுத்துக்களில் தெளிவாகவும் துல்லியமாகவும் அச்சிடப்பட்டிருக்க வேண்டும்.

1A - PG 7798- 53 (2026/07)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

| *தொடர் இல.* | *தொடர்புடைய இலங்கை தரநிலையில் குறிப்பிடப்பட்டுள்ள உற்பத்திப் பொருளின் பொதுப்பெயர்* | *இலங்கை கட்டளைகள்* |
|---|---|---|
| 01 | குழந்தைகளுக்கான சவர்க்காரம் | இ.க 547 குழந்தைகளுக்கான சவர்க்காரத்திற்கான விபரக்கூற்று |
| 02 | குளியலறை சவர்க்காரம் | இ.க 34 குளியலறை சவர்க்காரத்திற்கான விபரக்கூற்று |
| 03 | ஷேவிங் சவர்க்காரம் | இ.க 36 ஷேவிங் சவர்க்காரத்திற்கான விபரக்கூற்று |
| 04 | கிருமி நாசினி (கார்பாலிக்) சவர்க்காரம் | இ.க 35 கிருமி நாசினி (கார்பாலிக்) சவர்க்காரத்திற்கான விபரக்கூற்று |
| 05 | சலவைச் சவர்க்காரம் | இ.க 554 சலவைச் சவர்க்காரத்திற்கான விபரக்கூற்று |
| 06 | குளிக்கும்போது பாவிக்கப்படும் சவர்க்காரம்(பாதிங் பார்) | இ.க 1220 குளிக்கும்போது பாவிக்கப்படும் சவர்க்காரத்திற்கான (பாதிங் பார்) விபரக்கூற்று |
| 07 | மென்மையான சவர்க்காரம் | இ.க 37 மென்மையான சவர்க்காரத்திற்கான விபரக்கூற்று |

இப்பணிப்புரை, 2027 ஆம் ஆண்டு யூலை மாதம் 09 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் கட்டளைப்படி,

**எஸ். எம். டீ. சூரியகுமார,**
தவிசாளர்
(பதில் கடமை)

கொழும்பு,
2026, யூலை 10.

ECG 07 - 0144